# 2022 ம் வருடம் /டோர்மன்ட் காப்பீடு

## கொரியாவில் சேவை செய்த காலத்தில் பெறப்பட்ட காப்பீட்டுத் தொகை தொடர்பான அறிவிப்பு

(தாய் நாட்டிற்கான பயணத்தின் போது விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளுதல் குறித்து)

இலங்கைக்கும் தென் கொரிய குடியரசிற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி தென் கொரிய குடியரசிற்கான உங்கள் சேவையின் போது உங்களின் ஊதியத்திலிருந்து கழிக்கப்பட்ட காப்புறுதி மற்றும் பயணத்தின் போது வாங்கிய விமான பயணச்சீட்டுக்களுக்கான செலவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் கோரப்படும் நன்மைகள் பற்றி கீழே கூறப்பட்டுள்ளது. தேவையான ஆவணங்களுடன் கொடுக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி மூலம் விண்ணப்பிக்கவும்.

- **மின்னஞ்சல் முகவரி·epscenterlk@yahoo.com**
- காப்பீட்டுத் தொகைக்கு விண்ணப்பிக்க இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உங்கள் பெயர் உள்ளதா என்பதை முதலில் சரிபார்க்கவும்.
- இந்தப் பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெற்றிருந்தாலும், நீங்கள் ஏற்கனவே இந்தக் காப்பீட்டுத் தொகையைப் பெற்றிருந்தாலோ அல்லது காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தாலோ,இன்னொரு முறைபண வழங்கல் இடம்பெறவோ விண்ணப்பம் செய்யவோ முடியாது.

- **தென் கொரியாவில் தற்போது தமது பணிகளைப் பூர்த்திசெய்து நாடு திரும்பியஊழியர்கள் கோரினால்**

1. பூர்த்தி செய்யப்பட்ட காப்பீட்டு விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (காப்பீட்டு விண்ணப்பப் படிவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய படிவத்தின் மாதிரிப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)
2. கடவுச்சீட்டின் முதல்பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்( புகைப்படத்துடன் கூடிய)
3. தேசிய அடையாள அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்( Scan ID)
4. கொரியாவிலிருந்து புறப்பட்டதை உறுதிசெய்யும் குடிவரவு குடியகழ்வு முத்திரையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் ( Departure Seal)
5. இலங்கையில் செயற்பாட்டிலுள்ள வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (இங்குள்ள வங்கியின் பெயர்/ கிளை எண் / கணக்கிலக்கம் மற்றும் கணக்கு வைத்திருப்பவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் வங்கி தொடர்பான Swift Codeஐ குறிப்பிட வேண்டும். மேலும், அதில் **குறிப்பிடப்பட்டுள்ள பெயர்அவ்வாறே கடவுச்சீட்டிலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.**

- **தற்போதுவேறொரு வெளிநாட்டில் வசிக்கும்கொரியாவில் பணிபுரிந்துபின்னர் அந்நாட்டை விட்டு வெளியேறிய ஒருவரின் பிரதிநிதி விண்ணப்பித்தால்**

பூர்த்தி செய்யப்பட்ட காப்பீட்டு விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (காப்பீட்டு விண்ணப்பப் படிவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய படிவத்தின் மாதிரிப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

1. ஊழியரின் கையால் எழுதப்பட்ட அவரது தொலைபேசி எண்ணுடன் கூடிய அங்கீகாரம் வழங்கப்பட்டதற்கான ஊர்சிதக் கடிதம் (அவர்/அவள் வசிக்கும் நாட்டின் தூதரகத்தினால் சான்றளிக்கப்பட்டது)
2. அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் தொடர்பைக் காட்டும் பிறப்புச் சான்றிதழ்/திருமணச் சான்றிதழ்
3. அவர்/அவளின் செயற்பாட்டிலுள்ள வங்கி கணக்கின் பிரதி
4. கடவுச்சீட்டு அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதி

இவை அனைத்தும் வழக்கறிஞர் ஒருவரால்உறுதிசெய்யப்பட்டு பின்னர் வெளியுறவு அமைச்சகத்தால் (Consular Division)உறுதிசெய்யப்பட வேண்டும். இறுதியாக அது இலங்கையின் கொரிய தூதரகம்உறுதிசெய்ய, மின்னஞ்சல் மூலம் EPS நிறுவனத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

- **தென் கொரியாவில் பணிபுரிந்துவிட்டு தற்போதுநாடுதிரும்பியுள்ள இலங்கையில் இருக்கும் ஒருவரின் பிரதிநிதி விண்ணப்பித்தால்**

பூர்த்தி செய்யப்பட்ட காப்பீட்டு விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (காப்பீட்டு விண்ணப்பப் படிவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய படிவத்தின் மாதிரிப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

1. கடவுச்சீட்டின் முதல்பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்( புகைப்படத்துடன் கூடிய)
2. ஊழியர் தனது கையெழுத்தில் தொலைபேசி எண்ணுடன் ஆங்கிலத்தில் எழுதிய அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்
3. முகவர் மற்றும் பணியாளரின் தேசிய அடையாள அட்டையின்ஸ்கேன் செய்யப்பட்ட நகல்( Scan ID)
4. கொரியாவிலிருந்து புறப்பட்ட குடியேற்ற முத்திரையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்( Departure Seal)
5. குறிப்பிட்ட தொழிலாளியின் நடைமுறையிலுள்ள வங்கி கணக்கு புத்தகத்தின்ஸ்கேன் செய்யப்பட்ட நகல்

இந்த ஆவணங்கள் ஒரு வழக்கறிஞரால் சான்றளிக்கப்பட வேண்டும்

- **தென் கொரியாவில் பணிபுரிந்து இறந்த ஒருவருக்கு குடும்ப உறுப்பினர் விண்ணப்பித்தால்**
  பூர்த்தி செய்யப்பட்ட காப்பீட்டு விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (காப்பீட்டு விண்ணப்பப் படிவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய படிவத்தின் மாதிரிப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

B.இறந்தவர்கள் சார்பாக முன்வைக்க வேண்டிய ஆவணங்கள்

| | |
|---|---|
| 1. | மரணச் சான்றிதழ் |
| 2. | பிறப்புச் சான்றிதழ் |
| 3. | கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படத்துடன் கூடிய பக்கம் |
| 4. | கொரியாவிலிருந்து புறப்பட்ட குடியேற்ற முத்திரையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்( Departure Seal) |
| 5. | தேசிய அடையாள அட்டையின் முன் மற்றும் பின் பக்கங்களின் பிரதி கள் |

1,2,5 ஆகிய இலக்கங்களின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு , எண் 3 மற்றும் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் தொடர்புடைய அத்தாட்சிகளுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அசல் ஆவணங்கள் எப்போதும் புகைப்பட பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

C. கோரிக்கையாளர் சார்பாக முன்வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

| | |
|---|---|
| 1 | குடும்ப உறவை நிரூபிக்கும் சான்றிதழ்(பிறப்புச் சான்றிதழ்/திருமணச் சான்றிதழ் ) |
| 2 | நடைமுறையிலுள்ள வங்கிக் கணக்கின் பிரதி மற்றும் கணக்குரிமையாளரின் பெயர் / குறிப்பிட்ட வங்கியின் Swiftகுறியீடு |
| 3 | தேசிய அடையாள அட்டையின் முன்பக்க மற்றும் பின்பக்கத்தின் பிரதி |

1 ஆம் இலக்கத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு , எண் 2மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் தொடர்புடைய சான்றிதழுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அசல் ஆவணங்கள் எப்போதும் புகைப்பட நகல்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலுள்ள 2 பகுதிகளிலும் குறிப்பிட்ட (B மற்றும் C ) சகல ஆவணங்களும் வழக்கறிஞர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டு அவ் ஆவணங்கள் வெளிநாட்டு செயற்பாட்டு அமைச்சுக்கு சான்றுப்படுத்த அனுப்பப்பட வேண்டும்.இறுதியில் இலங்கை கொரிய காரியாலயத்தின் ஊடாக சான்றுப்படுத்தப்பட்டுEPSநிறுவனத்திற்கு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டு

**கடவுச்சீட்டின் பெயர்:**

**முதலெழுத்து - ரத்னாயக்க**

**வேறு பெயர்கள் - முதியன்சலாகே சுமுது நிமந்த**

**மேலே காட்டப்பட்டுள்ளவாறு கடவுச்சீட்டிலுள்ள பெயரிற்கு இணங்க வங்கி கணக்கின் பெயர் இவ்வாறு குறிப்பிடப்பட வேண்டும்.**

**1. ரத்னாயக்க முதியன்சலாகே சுமுது நிமந்தஅல்லது**

**2. R.Mசுமுதுநிமந்தஅல்லது**

**3 R.M.S.நிமந்த**

மேலே குறிப்பிட்டுள்ளப்படி, நீங்கள் ஏற்கனவே இந்தக் காப்பீட்டுத் தொகையைப் பெற்றிருந்தால் அல்லது காப்பீட்டுத் தொகையைப் பெற விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தால், மீண்டும் பணத்தைபெறவோ அல்லது விண்ணப்பம் செய்யவோ முடியாது, எனவே இது குறித்து விண்ணப்பம் செய்வதையோ அல்லது விசாரணை செய்வதையோ தவிர்க்கவும்.

**நீங்கள் பூரணப்படுத்திய விண்ணப்ப படிவத்தை எங்களுக்கு உங்களின் மின்னஞ்சலின் தலைப்பில்(Subject of the mail)"டோர்மன்ட் காப்பீடு - விண்ணப்பதாரியின் பெயர்"என குறிப்பிடுக**

**இலங்கை EPS நிலையம்**

**(2022.09.12)**